72—

போக்குவரத்துப் பணிமனை

***1683—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அல்லும் பகலும் அயராது உழைத்து, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கின்ற தாரக மந்திரத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்காக உழைத்துவரும், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், இதய தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம், வாழும் மனித தெய்வம், நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலைப் பகுதியில்

வசித்துவரும் மக்களில், 100-க்கு 99 சதவிகித மக்கள் மலைவாழ் இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்களின் அடிப்படைத் தேவைக்கேற்ப, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு மட்டும் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூ.104 கோடி திட்டச் செலவில் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மலைவாழ் மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மலைப் பகுதிக்குச் சென்றுவரும் 12 பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கொல்லிமலையை மாசில்லா சுற்றுலாத் தலமாக அறிவித்து, பல்வேறு திட்டச் செயல்பாடுகளால் சிறந்த சுற்றுலாத் தலமாக அது விளங்குகிறது. அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்கின்றார்கள். நாமக்கல் அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் ஆத்தூர் பகுதிகளிலிருந்து வரும் நான்கு பேருந்துகள் கொல்லிமலையில் தங்கிச் செல்கின்றன. அங்கே அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, பேருந்தைப் பழுதுபார்க்க, பராமரிக்க வசதியாக அங்கு பேருந்து பணிமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில், சேலம், நாமக்கல் மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களுக்கு, கொல்லிமலை மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 12 அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நான்கு பேருந்துகள் மட்டுமே கொல்லிமலையில் இரவு நேரங்களில் நிறுத்தம் செய்யப்படுகின்றன. இப்பேருந்துகள்மூலம், கொல்லிமலையிலிருந்து காலை வேளைகளில் பொது மக்கள், நாமக்கல், சேலம் மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கும், மற்ற பேருந்துகள்மூலம் மேற்படி இடங்களிலிருந்து காலை வேளைகளில் பொது மக்கள் கொல்லிமலைக்குச் செல்வதற்கும் பேருந்து வசதி உள்ளது. இப்பேருந்துகளுக்கான பராமரிப்புப் பணிகள் சேலம், நாமக்கல், இராசிபுரம் மற்றும் தம்பம்பட்டி ஆகிய கிளைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, மேற்படி இடத்தில் பணிமனை அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில்*

இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். அங்கு அறப்பளீஸ்வரர் ஆலயம், வாசலூர்பட்டி படகு இல்லம், மாசிலா அருவி, எட்டுக்கையம்மன் திருக்கோயில், ஸ்ரீ பெரியசாமி திருக்கோயில் மற்றும் நம்மருவி போன்ற சிறந்த இடங்களைச் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டியுள்ளது. வருகின்ற காலக்கட்டத்தில், மேற்படி இடங்களைச் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏதுவாக, சென்னையைப் போன்று, மினி பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடம் நீண்ட நாட்களாக, 7 வருடங்களாக அப்படியே இருக்கின்றது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் மலைப் பகுதிக்கு நிறைய செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏழைகளின் ஊட்டியாக கொல்லிமலை விளங்கி வருகின்றது. எனவே, இதைச் செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் நான்கு பேருந்துகள் மட்டுமே இரவு நேரங்களில் நிறுத்தம் செய்யப்படுவதால், அந்த நான்கு பேருந்துகளுக்காக தனியாக பணிமனை ஒன்று அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நகரத்திலிருந்து, மகாபலிபுரம், பூம்புகார்,*

வேளாங்கண்ணி, திருச்செந்தூர், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு, வெளி மாவட்டங்களுக்குச் செல்ல ஏதுவாக விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. இப்பொழுது அந்தப் பேருந்துகளெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதனால், திருவொற்றியூரில் வாழுகின்ற மக்கள் கோயம்பேட்டுக்குச் சென்று, வெளியூர்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனைச் சரிசெய்கின்ற வகையில், முன்பிருந்ததைப்போல, வெளியூர் மாவட்டங்களுக்குச் செல்ல ஏதுவாக, அந்தப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பேருந்துகள் எப்பொழுது நிறுத்தப்பட்டன என்பதை எழுத்துபூர்வமாக தங்கள் மூலமாக அளித்தால், அதுகுறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

முற்பகல் 11-10

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், குமுளியில் அமைந்திருக்கின்ற பேருந்து பணிமனை தற்போது Lower Camp-க்கு மாற்றப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்றுவதற்கு ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியில், அந்தப் பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்றுவதற்கு ஆணையும் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு பேசி, அந்தப் பணிமனையை பேருந்து நிலையமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இலட்சக்கணக்கான

ஐயப்ப பக்தர்கள் அந்த குமுளி border-க்கு வருகிறார்கள். கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் எல்லையாக இருக்கின்ற குமுளியில், பேருந்துகள் நடுரோட்டில் நிற்கின்றன; மக்கள் நிற்பதற்கு வசதியில்லை. அந்தப் பணிமனையை பேருந்து நிலையமாக மாற்றினால், சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, ஐயப்ப பக்தர்களும் பயன்பெறுவார்கள். இங்கிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் ஐயப்பன் கோயிலுக்குச் சென்று வருகிறார்கள் என்பதை மனதிலே வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிமனையைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். பேருந்து நிலையம் அமைப்பது, உள்ளாட்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் வரக்கூடிய பிரச்சினை. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ, ஆண்டி அம்பலம் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள், வாய்ப்புத் தருகிறேன்.*

***திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12-8-2016 அன்று வெள்ளிக்கிழமை*